DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.360/2021**

| | | | |
|---|---|---|---|
| Name | : | வனஜா | **Rw1** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of August 2023.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவியாளர் ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் பாலிசி நகல் எ.ம.சா.ஆ.1 ஆகும். 1ம் எதிர்மனுதாரருக்கு காப்பீட்டுக்கழக வழக்கறிஞர் மூலம்அனுப்பிய அறிவிப்பு நகலும் அஞ்சலக ரசீதும் எ.ம.சா.ஆ.2 ஆகும். 1ம் எதிர்மனுதாரர் மேற்படி முகவரியில் இல்லை என்று திரும்பி வந்த கவர் எ.ம.சா.ஆ.3 ஆகும். 2ம் எதிர்மனுதாரருக்கு காப்பீட்டுக்கழக வழக்கறிஞர் மூலம்அனுப்பிய அறிவிப்பு நகலும் அஞ்சலக ரசீதும் எ.ம.சா.ஆ.4 ஆகும். 2ம் எதிர்மனுதாரர் மேற்படி பெற்றுக்கொள்ளாமல் திரும்பி வந்த கவர் எ.ம.சா.ஆ.5 ஆகும். (எ.ம.சா.ஆ.1 முதல் 5 வரையான ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபிக்கப்படுகிறது). மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து தேதியில் விபத்திற்குண்டான வாகனம் எங்களிடத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்பது தான் எங்களுடைய பிரதான ஆட்சேபனை ஆகும். யாருடைய கவனக்குறைவு என்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ம.சா.ஆ.6 ஆவணம் எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்டது தான். ம.சா.ஆ.6 ல் இருந்து இதற்கு முந்தைய காப்பீடும் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருப்பதாகத்தான் துலங்கும் என்றால் சரிதான். அது தான் எ.ம.சா.ஆ.1 ஆகும். எ.ம.சா.ஆ.1 க்கு செல்லான் எண்.7305078119000003071 மூலமாக 26.09.2019 ம் தேதி பணம் பெறப்பட்டிருக்கிறது. அந்த வாகனமானது 2018 ல் இருந்து வாங்கப்பட்ட நாள் முதல் எங்கள் நிறுவனத்தில் தொடர் காப்பீட்டில் உள்ளது என்றால் சரியல்ல. இந்த தொகை ரொக்கமாகத்தான் பெறப்பட்டிருக்கிறது. பொதுவாக காசோலை வழங்கப்பட்டால் அதை வங்கியில் டெப்பாசிட் செய்ததற்கான ரசீது எங்கள் கைவசம் இருக்கும். காசோலையை வசூல் செய்வதற்கான கலெக்ஷன் சார்ஜ் பாலிசியில் வராது. முன்மொழிப்படிவம் கொடுக்கப்படும் என்றால் பேக்கேஜ் பாலிசிக்கு மட்டுமே முன்மொழிப்படிவம் கொடுக்கப்படும். பேக்கேஜ் பாலிசி மற்றும் லயபிலிட்டி பாலிசிக்கு என்று தனித்தனியாக கிடையாது என்றால் சரியல்ல. மேலே கூறிய செல்லான் **ம.சா.ஆ.12** ஆகும். வாகனத்தின் உரிமையாளர் ஏற்கனவே விபத்திற்கு முன்பாகவே காசோலை வழங்கி அது மதிப்பளிக்கப்பட்டு வரவு வைக்கப்பட்டிருக்கிறது என்றும், தற்போது நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்த பிறகு எங்கள் தேவைக்கு ஏற்ப விபத்து தேதிக்கு பின்னிட்டு பாலிசி வழங்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.1 ல் காப்பீடு செய்தவரின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 எங்கள் தேவைக்கு ஏற்ப உற்பத்தி செய்துள்ளதால் எங்கள் நிர்வாகம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.08.09 18:51:36 +0530